இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 84 – ஒலி: 115 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – கார்த்திகை 19 – வெள்ளிக்கிழமை 05 டிசம்பர் 2025 – கோவை ★ ★ 16 + 23 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 115: Thiruvalluvar Year - 2056 - Karthigai 19 - Friday 05 December 2025 - Kovai ★★ 16+23 Pages ₹ 5.00


## ‘திராவிட மாடல்’ அரசுடன் இணைந்து

# வரலாறு படைக்கவிருக்கும் மாற்றுத் திறனாளிகள்!

## ‘மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல்’ அறிமுக விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.12.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் தினம் 2025யை முன்னிட்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவை புரிந்த தொண்டு நிறுவனத்திற்கான விருதினை செங்கல்பட்டு மாவட்டம், பள்ளியகரம், அமளி இல்லத்தின் அருட்சகோதரி மரியா சிலியா அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்த விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் கே.என்.நேரு, திருமதி கீதா ஜீவன், ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, டிச. 5-**

**“திராவிட மாடல் அரசுடன் இணைந்து வரலாறு படைக்கவிருக்கும் மாற்றுத் திறனாளிகள்” என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உலக மாற்றுத் திறனாளிகள் நாளை முன்னிட்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில் உரையாற்றும்போது கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (3.12.2025) சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், உலக மாற்றுத்திறனாளிகள் நாளை முன்னிட்டு நடைபெற்ற உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் அறிமுக விழாவில், ஆற்றிய உரை வருமாறு:-

உலக மாற்றுத்திறனாளிகள் தின விழா நிகழ்ச்சியில் பங்கேற்று சிறப்பித்துக் கொண்டிருக்கக்கூடிய உங்களை எல்லாம் வரவேற்று மகிழ்ந்திருக்கக் கூடிய என்னுடைய அன்பிற்கும், பாசத்திற்கும் உரிய மாற்றுத் திறனாளிகளின் நலச் சங்கங்களின் நிர்வாகிகள், அன்பிற்கினிய சகோதர, சகோதரிகள் அத்தனை பேருக்கும் என்னுடைய இதயபூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

என்ன பேசுவது என்ற ஒரு உணர்ச்சிமயமான உணர்வுக்குச் சென்று அப்படியே உங்களை எல்லாம் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தால் போதும் என்ற நிலையில் நான் உங்கள் முன்னால் நின்று கொண்டிருக்கிறேன்.

இங்கே திருமதி ரோகினி அவர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்டுச் சொன்னார்; இது ஒரு உணர்ச்சிகரமான நிகழ்ச்சி; நெகிழ்ச்சியான நிகழ்ச்சி என்று சொன்னார், உண்மை தான். அந்த உணர்வோடு தான் நான் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றுக் கொண்டிருக்கிறேன்.

இங்கே வந்திருக்கக்கூடிய, அதே போல இந்த நிகழ்வை தொலைக்காட்சியின் மூலமாக நேரலையில் பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய அத்தனை மாற்றுத் திறனாளி சகோதர சகோதரிகளுக்கும் முதலில் என்னுடைய இதயபூர்வமான “மாற்றுத்திறனாளிகள் நாள்” வாழ்த்துகளை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த நாள், மற்ற நாட்களைப் போல் இல்லாமல், இது வெறும் கொண்டாட்டத்திற்கான நாள் மட்டும் கிடையாது; நம்முடைய திராவிட மாடல் அரசை பொறுத்தவரைக்கும், மாற்றுத் திறனாளி தோழர்களுக்கு சம வாய்ப்புகளை வழங்கி, சம உரிமையுடன் சமுதாயத்தில் வாழ்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதை நினைவுறுத்தக் கூடிய நாள் தான் இந்த நாள்!

### ஐ.நா. சபையின் கருப்பொருளில் நடைபோடும் திராவிட மாடல் அரசு!

அந்த வகையில், உங்களின் திறன்களை போற்றும் நாளாக இந்த நாளை நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்! அதிலும் “சமூக முன்னேற்றம் காண மாற்றுத்திறனாளிகளை உள்ளடக்கிய சமூகங்களை வளர்ப்பது!” என்பதை, இந்த ஆண்டிற்கான மையக் கருவாக ஐ.நா. சபை அறிவித்திருக்கிறது! இந்தக் கருப்பொருள்தான் நம்முடைய திராவிட மாடல் அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கக்கூடிய பாதை! அதில் முக்கியமான மைல்கல்தான் இந்த விழா!

இந்த விழாவிற்கு சிறப்பு விருந்தினராக மதிப்பிற்குரிய திருமதி ரோகினி அவர்களை ஏன் அழைத்தோம்? என்று சிலர் கேட்கலாம். சமூக சேவையை சிலர் திடீரென்று வெளிப்படுத்துவார்கள்; திடீரென்று காணாமல் போய்விடுவார்கள். ஆனால், பல ஆண்டுகளாக தொடர்ந்து சமூகத்திற்கு செயல்பட்டு வரக்கூடியவர் தான் திருமதி ரோகினி அவர்கள். அதுதான்


தொடர்ச்சி 3ஆம் பக்கம்


## பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசத்தில் 2 ஆண்டுகளில்

# ரூ.8 கோடியை வீணடித்த 9 சமூக நலவாரியங்கள்!

## சொகுசு வசதி அளித்த அவலம்!

போபால், டிச. 5 -

மத்தியப்பிரதேசத்தில் அமைக்கப்பட்ட 9 சமூக நலவாரியங்கள் எவ்வித மக்கள் பணியும் ஆற்றாமல் கோடிக்கணக்கில் பணத்தை வீணடித்தது சட்டசபையில் தெரிய வந்துள்ளது.

தற்போது பா.ஜ.க. ஆளும் மத்திய பிரதேசத்தில் கடந்த 2023ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பு பல்வேறு சமூகத்தினருக்காக 9 நலவாரியங்கள் அவசரமாக அமைக்கப்பட்டன.

கடந்த செப்டம்பர் மாதம் கலைக்கப்பட்ட இந்த வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து சட்டமன்ற உறுப்பினர் பிரதாப் கிரேவால் எழுப்பிய கேள்விக்கு, மாநில அரசு அளித்த பதில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த வாரியங்கள் எவ்வித உருப்படியான பணிகளையும் மேற்கொள்ளவில்லை என்றும், ஒரு பயனாளியைக்கூடத் தேர்வு செய்யவில்லை என்றும் தெரியவந்துள்ளது.

இதற்காக ஒதுக்கப்பட்ட 8.34 கோடி ரூபாய் நிதியில், வாரியத் தலைவர்களுக்கு அமைச்சர் அந்தஸ்திலான சலுகைகள், அரசு வாகனங்கள் மற்றும் இதர படிகள் மட்டுமே வாரி வழங்கப்பட்டுள்ளன. ஒன்பது வாரியங்களில் மூன்று வாரியங்கள் மாநில அளவில் ஒரு கூட்டத்தைக் கூடக் கூட்டவில்லை என்பதும் அம்பலமாகியுள்ளது. வாரியங்கள் அமைக்கப்பட்டதன் நோக்கம் நிறைவேறாததால் இளைஞர்களுக்கோ அல்லது வேலையற்றவர்களுக்கோ எவ்வித உதவியும் போய்ச் சேரவில்லை.

இதுகுறித்து எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன. ‘தேர்தலின் போது குறிப்பிட்ட சமூகத்தினரைக் கவருவதற்காகவும், அரசியல் லாபத்துக்காகவும் மட்டுமே இந்த வாரியங்கள் உருவாக்கப்பட்டன; தலைவர்களுக்குப் பதவி வழங்கித் திருப்திப்படுத்துவதே இதன் நோக்கம்’ என்று எதிர்க்கட்சியினர் கடுமையாகக் குற்றம் சாட்டியுள்ளனர்.

ஏற்கனவே கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தில் நிதி முறைகேடு நடந்ததாகக் கணக்குத் தணிக்கைத் துறை (சி.ஏ.ஜி.) சுட்டிக்காட்டியிருந்த நிலையில், தற்போது மேலும் 9 வாரியங்களின் செயலற்றத் தன்மை வெளியாகி அரசியல் வட்டாரத்தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

## ஹைதராபாத் மெட்ரோவில் 20 திருநங்கைகளுக்கு பாதுகாவலர் பணி!

ஹைதராபாத், டிச. 5–

ஹைதராபாத் மெட்ரோ ரயில் (எச்.எம்.ஆர்.எல்.) நிறுவனம் நாட்டின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மேம்படுத்தப்பட்ட நகர்ப்புற போக்குவரத்து சேவை அமைப்பாக உள்ளது.

57 நிறுத்தங்களை உள்ளடக்கிய 3 வழித்தடங்களில் ஹைதராபாத் மெட்ரோ ரயில் சேவை வழங்கப்பட்டு வருகிறது. தினமும் 5 லட்சம் பேர் ஹைதராபாத் மெட்ரோ ரயில்களில் பயணிக்கின்றனர்.

இந்த நிலையில் பயணிகள் அதிலும் குறிப்பாக பெண் பயணிகளின் பாதுகாப்புக்காக ஹைதராபாத் மெட்ரோ 20 திருநங்கைகளை தேர்வு செய்து அவர்களுக்குத் தேவையான பயிற்சிகளை அளித்து பாதுகாப்பு பணியில் இணைத்துக்கொண்டுள்ளது.

இதன் மூலம், திருநங்கைகளுக்கு சமூக அதிகாரமளித்தல் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், பயணிகள் பாதுகாப்பும் மேம்படும் என்று ஹைதராபாத் மெட்ரோ தெரிவித்துள்ளது.

# நாடாளுமன்ற வளாகத்தில் ‘இந்தியா’ கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டம்!



புதுடெல்லி, டிச.5–

எஸ்.ஐ.ஆர். மற்றும் 4 தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக நாடாளுமன்ற வளாகத்தில் இந்தியா கூட்டணி எம்.பி.க்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணி, 4 தொழிலாளர் விரோத சட்டங்கள் ஆகியவற்றுக்கு இந்தியா கூட்டணி கட்சிகள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன.

இந்நிலையில், எஸ்.ஐ.ஆர். மற்றும் 4 தொழிலாளர் விரோத சட்டங்களை கண்டித்து நாடாளுமன்ற வளாத்தில் இந்தியா கூட்டணி கட்சியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் மூத்தத் தலைவர் சோனியாகாந்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் மல்லிகார்ஜுன கார்கே, ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி, தி.மு.க. மக்களவை குழுத் தலைவர் டி.ஆர்.பாலு, நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி, மாநிலங்களவை தி.மு.க. குழுத் தலைவர் திருச்சி சிவா மற்றும் ஆ.ராசா உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி எம்.பி.க்கள் கலந்து கொண்டு எஸ்.ஐ.ஆர். மற்றும் 4 தொழிலாளர் விரோத சட்டங்களுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

இந்நிலையில் எதிர்க்கட்சிகளின் வலியுறுத்தலைத் தொடர்ந்து டிச.9, 10ம் தேதிகளில் நாடாளுமன்றத்தில் எஸ்.ஐ.ஆர். குறித்து விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் ஓம் பிர்லா தலைமையில் நேற்று முன்தினம் நடந்த அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. 8ம் தேதி வந்தே மாதரம் பாடல் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தவும் அலுவல் ஆய்வுக் குழுவில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# நெல்லுக்கான ஈரப்பதத்தை 22% ஆக உயர்த்த வேண்டும்!

## மக்களவையில் தி.மு.க. வலியுறுத்தல்!

புதுடெல்லி, டிச. 5-

நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 22 சதவீதம் ஆக உயர்த்த வேண்டும் என மக்களவையில் தி.மு.க. வலியுறுத்தி உள்ளது.

விவசாயிகளின் நலன் கருதி, நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை, 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்த வேண்டும் என பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதினார்.

இதனையடுத்து ஒன்றியக் குழுக்கள் தமிழ்நாட்டுக்கு நேரில் வந்து ஆய்வு நடத்தின.

ஆனால் ஈரப்பதத்தை உயர்த்தி ஒன்றிய அரசு இன்னும் அறிவிக்கவில்லை.

இந்த நிலையில் இந்த விவகாரம் தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்பிய கழக உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, நேரில் ஆய்வு செய்த பிறகும் நெல் கொள்முதலுக்கான ஈரப்பதத்தை 22 சதவிதம் ஆக உயர்த்தாதது ஏன் என வினவினார்.

ரயில்வே திட்டங்கள் மற்றும் கல்விக்கான நிதியை வழங்க மறுத்து, தமிழ்நாட்டுக்கு ஒன்றிய அரசு தொடர்ந்து துரோகம் இழைத்து வருவதாக அவர் குற்றம் சாட்டினார்.